# மேட்டுப்பாளையம் நகராட்சி

31.05.2019ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை **4.30** மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு பி பிளாக் 55 நகரளவு எண்.5/2 ல் 7.29 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி வரைபடம் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ஓப்புதல் (வழங்கப்பட்டது) கடிதம் ந.க.எண்.9692/2018/எல்ஏ2 ம.வ/ந.ஊ.ஆ எண்.16/2019 என எண்ணிடப்பட்டு, மனைப்பிரிவு நிபந்தனைகள் படியும் 28.02.2019 அன்று நடைபெற்ற மன்றக் கூட்டத்தின் தீர்மானத்தின் படியும் மனைப்பிரிவில் அமைக்கப்படும் உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா ஓதுக்கீட்டினை நகராட்சிக்குத் தானமாக ஏற்று மேலும் தீர்மானத்தில் கண்டுள்ளபடி மேட்டுப்பாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பத்திர எண். 2133/19, நாள்.28.02.2019) எனவே நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னைஅவர்களின் நிபந்தனைகள் படியும் வரைபடத்தில் கண்டுள்ள மனைப்பிரிவிற்கு ஓப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. மனைப்பிரிவில் அமையவுள்ள பூங்காக்கள் மற்றும் திறவிடங்கள் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் விவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.<br>2. மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள் தரத்தினையும், அளவுகளையும் நகராட்சி பொறியாளர் அவர்களால் சரிபார்க்கப்பட்டுள்ளது.<br>3. மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ஓப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2603/2011/எப்2 |
| 2. | இந்நகராட்சி பொறியியல் இயங்கி வரும் ஈப்பு எண் தா 40 C 7087 ல் உள்ள பழுதுகளை அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ரூ.7950/ செலவினம் மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.240/2019/இ1 |
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் ஒரு பகுதியாக நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடுகளில் Indoor மற்றும் Outdoor fogging செய்யப்பட்டு வருகிறது. எனவே, இதற்குத் தேவையான நோய்தடுப்பு மருந்து Pyrethrum 2% Extract 200 லிட்டர் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.2.60 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இம் மருந்தினை தமிழ்நாடு அரசு மருத்துவக் கழகம், சென்னை (TNMSC) அவர்களின் அங்கீகாரம் பெற்ற திருவாளர்கள் அருணை எண்டர்பிரைசஸ், சென்னை அவர்களிடமிருந்து நேரடியாக வாங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1840/2019/எச்1 |

4. மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32 தாசம்பாளையம் ரோட்டில் உள்ள தனியார் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து பைப் முலம் கொண்டு செல்ல பாபு மற்றும் பி.சுப்பையன் அவர்கள் விண்ணபத்தின் பேரில் சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ.12000/- செலுத்தியதன் பேரில் நகராட்சிக்கு எந்த வித ஆட்சேபணையும் இல்லை என்பதை தெரிவிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1357/2018/இ1

5. மேட்டுப்பாளையம் நகராட்சியில் முன்னாள் படைவீரர் கொடிநாள் நிதி வசூல் செய்வது தொடர்பாக ரூ.175000/-க்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் தொகையினை வசூல் செய்வது தொடர்பாக இரசீது புத்தகங்களில் உள்ள கொடிகளை சுய விருப்பத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட வேண்டும்.

| வ. எண் | இனம் | தொகை |
|---|---|---|
| 1 | சொத்துவரி பெயர் மாற்றம் விண்ணப்பம் | ரூ.100/- |
| 2. | கட்டிட விண்ணப்பம் 1க்கு | ரூ.500/- |
| 3, | புதிய குடிநீர் இணைப்பு 1க்கு | ரூ. 200/- |
| 4. | சொத்துவரி, காலியிட வரி மற்றும் புதியவரி விதிப்பு 1க்கு | ரூ.100/- |
| 5. | நில அளவை 1க்கு | ரூ.100/- |

மேற்கண்டவாறு படைவீரர் கொடிநாள் புத்தகங்களில் உள்ள இரசீதுகளை மனுதாரரின் சுய விருப்பத்தின் பேரில் வசூல் செய்து வசூல் செய்யப்பட்ட தொகையினை உரிய வங்கி கணக்கில் செலுத்தி இயக்குநர் முன்னாள் படைவீரர் நல அலுவலகம் கோவை அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

மேலும், வருவாய் ஆய்வர், துப்புரவு ஆய்வாளர், நகரமைப்பு ஆய்வாளர்கள் மற்றும் மின்கண்காணிப்பாளர் மேற்கண்ட விண்ணப்பங்களை பெறும் போது விண்ணபத்துடன் உரிய தொகை வசூல் செய்வது தொடர்பாக தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம்

ந.க.எண்.1557/2018/அ3

| | |
|---|---|
| 6. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என். 40 - 3711ன் கியர்பாக்ஸ் பழுதடைந்துள்ளது. மேலும் சில பழுதுகள் காரணமாக வாகனத்தை இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளதால், அதற்காகும் தோராய செலவினம் ரூ.60,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம். |
| 7. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு ஆட்டோ வாகனம் டி.என். 40D - 1995 பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, இவ்வாகனத்தை உடனடியாக பழுது நீக்கம் செய்து பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, இவ்வாகன பழுதினை நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ40,000/-.திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம். |
| 8. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40-0986 தகுதி சான்றிதழ் பெற வேண்டி சில பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பழுது பணிகளை சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 1.05 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம். |
| 9. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40F - 2851 (Front&Loader) பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இவ்வாகனம் இல்லாததால் உரக்கிடங்கில் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரிக்கும் பணியினை சரி வர மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் உரக்கிடங்கில் வாகனங்கள் கொண்டு வரும் குப்பை கழிவுகள் ஓரே இடத்தில் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்வாகனத்தினை உடனடியாக பழுது பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாகனத்தின் பழுது நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 2,55,000/-திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் |
| 10. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40சி - 0551ன் டயர்கள் பழுதடைந்துள்ளதால் வாகனத்தை இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக ஓட்டுநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்திற்கு தேவையான டயர்கள், டியூப்கள் மற்றும் பிளாப்புகள் ஆகியவை புதியதாக வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.60,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் |

| | |
|---|---|
| 11. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனங்களான டி.என்.40பி - 1483, டி.என்.40-0986 மற்றும் டி.என்.40-2273 ஆகியவற்றின் பேட்டரிகள் பழுதடைந்து வாகனத்தை இயக்க இயலாத நிலையில் உள்ளதாக அவ்வாகனங்களின் ஓட்டுநர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாகனங்களுக்கு தேவையான புதிய பேட்டரிகள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.30,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு 2019/2020ம் ஆண்டுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் காலணிகள் தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தில் இருந்து வாங்கவும் (SIDCO) அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ4,90,000/-. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்.</th><th>இனங்கள்</th><th>எண்ணிக்கை</th></tr><tr><td>1</td><td>கையுறை</td><td>105</td></tr><tr><td>2</td><td>கம்பூட் (சூ)</td><td>105</td></tr><tr><td>3</td><td>முக கவசம்</td><td>105</td></tr><tr><td>4</td><td>தலை கவசம்</td><td>105</td></tr><tr><td>5</td><td>ஒளிரும் மார் கவசம்</td><td>105</td></tr><tr><td>6</td><td>ரெயின் கோட்</td><td>108</td></tr><tr><td>7</td><td>காலனிகள்</td><td>108</td></tr><tr><td>8</td><td>ஓட்டுநர்கள் (சூ)</td><td>10</td></tr><tr><td>9</td><td>புல் பேஸ் மாஸ்க்<br>(கழிவு நீர் வாகனம் பணியாளர்களுக்கு)</td><td>4</td></tr></table><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம். |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் அனைத்து வானங்களுக்கும் 2019-20ஆம் ஆண்டிற்கான காப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டியுள்ளதால் அதற்காகும் தோராய செலவினம் ரூ3,00,000/-த்திற்கு தனி அலுவலரி ன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.400/2019/எச்1 |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் B.O.V செல்ல முடியாத தெருக்களில் கழிவுகளை தரம் பிரித்து பெற்றிட ஏதுவாக தள்ளுவண்டிகளில் பயன்படுத்தப்படும் நீலம் மற்றும் பச்சை நிற கூடைகள் 200 எண்ணிக்கையில் பெற்றிடவும் அதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ. 2.50 (இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம். |
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் நெகிழி கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் நெகிழி பொருட்கள் உபயோகப்படுத்துவதை தடை செய்யும் பொருட்டு செய்தித்தாள்களில் விளம்பரம் செய்ய தோராய செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1497/2017/எச்1 |

| | |
|---|---|
| 14 | |